செ.வெ.எண்.247 நாள்.05.09.2019

# பத்திரிக்கை செய்தி

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் மசால்சி பணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சார் ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் காலியாக உள்ள 16 மசால்சி பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்கு குறைந்தபட்ச வயது 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் மற்றும் கல்வித்தகுதி 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணபதாரர்களுக்கு அதிகபட்ச வயது தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், நபர்களுக்கு 35, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட நபர்களுக்கு 32, பொது பிரிவினருக்கு 30 வயது இருக்க வேண்டும். வயது வரம்பு அரசு விதிகளின்படி 01/07/2019 அன்று நிர்ணயம் செய்யப்பட்ட வயது வரம்புக்குள் மிகாமல் இருக்க வேண்டும். சம்பள விகிதம் ரூ.15700–50000 மற்றும் இதரபடிகள் ஆகும்.

விருப்பமும், தகுதியும் உள்ள நபர்கள் கல்வி தகுதி, வயது, நிரந்தர முகவரி போன்ற விவரங்களை இணைத்து "மசால்சி பணி விண்ணப்பம்" என்று குறிப்பிட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு 30.09.2019 அன்று மாலை 5.45 மணிக்குள் அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மாதிரி விண்ணப்ப படிவம்</u>**

**<u>விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்: மசால்சி</u>**

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2 | தகப்பானார் பெயர் | |
| 3 | பிறந்த தேதி (கல்வி சான்றிதழில் உள்ளவாறு) | |
| 4 | கல்வித் தகுதி | |
| 5 | முன்னுரிமை விவரம் | |
| 6 | விண்ணப்பதாரரின் மதம் / இனம் / சாதி உட்பிரிவு விவரம் | |
| 7 | நிரந்தர முகவரி | |
| 8 | குடும்ப அடையாள அட்டை / ஆதார் அட்டை விவரம் | |
| 9 | காவல் துறையில் வழக்கு ஏதும் நிலுவையில் இருந்தால் அதன் விவரம் | |
| 10 | இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்ற சான்றிதழ்களின் விவரம் | |

மேற்குறிப்பிட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என உறுதியளிக்கின்றேன்.

மனுதாரர் கையொப்பம்

செ.வெ.எண்.248 நாள்.05.09.2019

# பத்திரிக்கை செய்தி

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரவுக்காவலர் பணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சார் ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் காலியாக உள்ள 16 இரவுக்காவலர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி இரவுக் காவலர் பதவிக்கு ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

இதற்கு குறைந்தபட்ச வயது 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் மற்றும் கல்வித்தகுதி 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், நபர்களுக்கு 35, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட நபர்களுக்கு 32, பொது பிரிவினருக்கு 30 வயது இருக்க வேண்டும். வயது வரம்பு அரசு விதிகளின்படி 01/07/2019 அன்று நிர்ணயம் செய்யப்பட்ட வயது வரம்புக்குள் மிகாமல் இருக்க வேண்டும். சம்பள விகிதம் ரூ.15700–50000 மற்றும் இதரபடிகள் ஆகும்.

விருப்பமும், தகுதியும் உள்ள நபர்கள் கல்வி தகுதி, வயது, நிரந்தர முகவரி போன்ற விவரங்களை இணைத்து "இரவுக்காவலர்" பணி விண்ணப்பம் என்று குறிப்பிட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு 30.09.2019 அன்று மாலை 5.45 மணிக்குள் அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மாதிரி விண்ணப்ப படிவம்</u>**

**<u>விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்: இரவுகாவலர்</u>**

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2 | தகப்பானார் பெயர் | |
| 3 | பிறந்த தேதி (கல்வி சான்றிதழில் உள்ளவாறு) | |
| 4 | கல்வித் தகுதி | |
| 5 | முன்னுரிமை விவரம் | |
| 6 | விண்ணப்பதாரரின் மதம் / இனம் / சாதி உட்பிரிவு விவரம் | |
| 7 | நிரந்தர முகவரி | |
| 8 | குடும்ப அடையாள அட்டை / ஆதார் அட்டை விவரம் | |
| 9 | காவல் துறையில் வழக்கு ஏதும் நிலுவையில் இருந்தால் அதன் விவரம் | |
| 10 | இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்ற சான்றிதழ்களின் விவரம் | |

மேற்குறிப்பிட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என உறுதியளிக்கின்றேன்.

மனுதாரர் கையொப்பம்